


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஜூலை. 27, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 288 ❖ ரூ.10

## மிகச் சிறந்த மருத்துவமனை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை

# பாராட்டு

## 'நம்மை காப்போம் 48' திட்டத்தில் மதுரை அரசு மருத்துவமனை தொடக்கம் முதலே முதலிடத்தில் உள்ளது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை 3,185 பேர் விபத்துகளில் காயமடைந்து இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர்: அமைச்சர் மா.சு

மதுரை, ஜூலை. 27:

விபத்துகளில் காயமடைந்தவர்கள் உயிரைக் காப்பாற்றும் 'நம்மை காப்போம்-48' மருத்துவத் திட்டத்தில் தமிழகத்தில் மதுரை அரசு மருத்துவமனை முதலிடம் வகித்ததற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியம் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் பெருங்காமநல்லூர், இ.கோட்டைப்பட்டி, மள்ளப்புரம் ஆகிய இடங்களில் புதிய துணை சுகாதார நிலையங்களை மக்கள் பயன்பாட்டிற்கு சுகாதாரத்துறைஅமைச்சர் மா.சுப்பிரமணியம் திறந்து வைத்தார். தொடர்ந்து அவர், அமைச்சர்கள் பி.மூர்த்தி, பிடிஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோருடன் அரசு ராஜாஜி மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையத்தில் ஆய்வு செய்தார். அப்போது அவர், முடநீக்கியல் மற்றும் விபத்து அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைப்பெறும் நோயாளிகளை பார்வையிட்டு அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

அதன்பின் அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: "மதுரை மாவட்டத்தில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை ஒட்டுமொத்த தென்னகத்திற்கே மிகப்பெரிய மருத்துவ பயன்பாடு உள்ள மருத்துவமனையாக திகழ்கிறது. கடந்த டிசம்பர் 21ம் தேதி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ரூ.40 லட்சத்தில் எலும்பு வங்கி திறக்கப்பட்டது. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் எலும்பு வங்கி அமைப்பது இதுவே முதல்முறை. தற்போது மருத்துவமனைகளில் எலும்பு வங்கி பயன்பாடு மிகப்பெரிய தேவையாக உள்ளது.

கோவையில் ஒரு தனியார் மருத்துவமனை, டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் மட்டுமே எலும்பு மாற்று அறுவை



சிகிச்சை வெற்றிகரமாக நடக்கிறது. தற்போது தமிழகத்தில் மதுரை அரசு மருத்துவமனையில் இதுபோன்ற எலும்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடக்கிறது. தற்போது அந்த எலும்பு வங்கியில் உயிரிழந்த 36 நோயாளிகளிடம் இருந்து எலும்புகள் கொடையாக பெறப்பட்டு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த எலும்புகளைக் கொண்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ஒரு போலீஸ்காரர், கபடி வீரர், வாலிபால் வீரர் உள்பட விபத்துகளில் காயமடைந்த 7 பேருக்கு எலும்பு மற்றும் சவ்வு மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது.

முதல்வர் ஸ்டாலின் கடந்த டிசம்பர் 18ம் தேதி மேல்மருவத்தூர் மருத்துவமனையில் 'இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48' என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். தமிழக எல்லையில் யாருக்கு விபத்து நேரந்தாலும் 680க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சைக்கு அனுமதிக்க செய்வது, அனுமதிக்கப்பட்ட முதல் 48 மணி நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரை சிகிச்சை வழங்கி அவர்கள் உயிர்கள் காப்பாற்றப்படுகிறது.

இந்த மகத்தான திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. குஜராத்தில் சமீபத்தில் நடந்த இந்திய அளவிலான சுகாதாரத்துறை மாநாட்டில் இந்த திட்டம் பற்றி மத்திய சுகாதாரத்துறை அதிகாரிகள் ஆலோசித்தனர். அவர்கள் இந்தியா முழுவதும் இந்த திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு எந்தெந்த வகையில் இந்த திட்டத்தை செயல்படுத்துகிறது என்று ஆலோசனை கேட்டுள்ளனர்.

இப்படி சுகாதாரத்தறையில் தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக திகழ்கிறது. ஆண்டுதோறும், மாதந்தோறும் இந்த திட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் காப்பாற்றப்படுகின்றனர். தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் 'நம்மை காப்போம் 48' திட்டத்தில் மதுரை அரசு மருத்துவமனை தொடக்கம் முதலே முதலிடத்தில் உள்ளது.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை 3,185 பேர் விபத்துகளில் காயமடைந்து இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களுக்கு 'நம்மை காக்கும் 48' திட்டத்தில் ரூ.3 கோடியே 5 லட்சத்து 49 ஆயிரத்து 175 ரூபாய் ஒதுக்கீடு செய்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் கூட உயிரிழக்கவில்லை. இவர்களில் பலர் விபத்துகளில் காயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு வந்தவர்களாவர். தற்போது அவர்கள் நலமுடன் வீடு திரும்பியுள்ளனர். மிகச் சிறந்த மருத்துவமனையாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் மாதந்தோறும் நூற்றுக்கணக்கானோரை காப்பாற்றி வரும் இம் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்களை முதல்வர் பாராட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்தில் தமிழகம் முழுவதும் 96,807 பேர் விபத்துகளில் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர். இதில், ஆயிரக்கணக்கானோர் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, குருநானக் கல்லூரி பொன்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். விழாவில் அமைச்சர் த.மோ. அன்பரசன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர் அசன் மவுலானா, துணை மேயர் மகேஷ் குமார், குரு ஞானக்கல்லூரி தலைவர் ராஜிந்தர் சிங் பாசின், பொதுச் செயலாளர் மற்றும் தாளாளர் மஞ்சித் சிங் நய்யர், செயலாளர் குருமித் சிங் கனுஜா, கல்லூரி முதல்வர் ரகுநாதன், ஆலோசகர் மெர்லின் மொரோயிஸ் மற்றும் குருநானக்கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி சென்னை வருகிறார்

சென்னை , ஜூலை. 27:

2 நாள் பயணமாக நாளை சென்னை வரும் பிரதமர் நரேந்திரமோடி, செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழா மற்றும் அண்ணா பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாக்களில் கலந்துகொள்கிறார். இதையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகளை பிரதமரின் சிறப்புப் பாதுகாப்புப் படை குழுவினர் ஆய்வுசெய்தனர்.

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட் போட்டி நாளை தொடங்கி, அடுத்த மாதம் 10-ம் தேதிவரை நடைபெறுகிறது. இதனையொட்டி சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெறும் தொடக்க விழாவில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, இரண்டு நாள் பயணமாக சென்னை வருகிறார்.



அகமதாபாத்திலிருந்து தனி விமானம் மூலம், நாளை மாலை 4.45 மணிக்கு சென்னையை வந்தடைகிறார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம், ஐஎன்எஸ் அடையார் விமான தளத்துக்கு செல்கிறார். பின்னர் கார் மூலம், நேரு உள் விளையாட்டு அரங்கிற்கு செல்கிறார். செஸ் போட்டி தொடக்க விழாவில் பங்கேற்றுவிட்டு, கார் மூலம் ஆளுநர் மாளிகைக்கு செல்கிறார். ஆளுநர் மாளிகையில் இரவில் தங்கும் பிரதமர், 29-ம் தேதி காலை 10 மணிக்கு புறப்பட்டு, அண்ணா பல்கலைக் கழகம் சென்று அங்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கிறார்.

பட்டமளிப்பு விழா முடிவடைந்தபிறகு, சென்னை விமான நிலையம் செல்லும் பிரதமர், அங்கிருந்து மீண்டும் அகமதாபாத் செல்ல திட்டமிட்டுள்ளார். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வுசெய்வதற்காக பிரதமரின் சிறப்பு பாதுகாப்புப் படையான எஸ்பிஜி குழுவைச்சேர்ந்த 60 பேர் சென்னை வந்துள்ளனர். பல்வேறு குழுக்களாக பிரிந்து விமான நிலையம், நேரு உள்விளையாட்டு அரங்கம், அண்ணா பல்கலைக் கழகம், பிரதமரின் ஹெலிகாப்டர் தரையிறங்கும் ஐஎன்எஸ் அடையாறு ஆகிய இடங்களில் ஆய்வுசெய்தனர்.

மேலும், சென்னை விமான நிலையம் முழுவதும் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மீனம்பாக்கம் பழைய விமான நிலையம் முழுவதும் சிறப்பு பாதுகாப்பு படை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. விமான நிலையத்திற்கு அனுமதி இன்றி செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாடுகள் 29-ம் தேதி மாலை வரை அமலில் இருக்கும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மாணவியை விடுதிக்கு அழைத்து பாலியல் தொல்லை

## பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் கைது

சேலம் , ஜூலை. 27:

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறை பேராசிரியராக பணியாற்றி வருபவர் கோபி (வயது 45). இவர் கடந்த மே மாதம் முதல் பொறுப்பு பதிவாளராக பணியாற்றி வருகிறார். இவரிடம், சேலம் சித்தர் கோவில் பகுதியை சேர்ந்த மாணவி ஒருவர் ஆராய்ச்சி மேற்படிப்பு படித்து வருகிறார்.

சில தினங்களுக்கு முன்னர், பேராசிரியர் கோபி மாணவியிடம் ஆராய்ச்சி மேற்படிப்பு பாடம் தொடர்பாக விளக்கம் அளிப்பதாகவும் உடனே தான் தங்கி இருக்கும் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் உள்ள விடுதிக்கு வருமாறு கூறியுள்ளார். இதனை அடுத்து மாணவி தனது உறவினர்களுடன் பதிவாளர் கோபி தங்கியிருக்கும் விடுதிக்கு சென்றார். அப்பொழுது உறவினர்கள் விடுதிக்கு வெளியே காத்திருந்தனர். மாணவி மட்டும் விடுதிக்கு சென்று பதிவாளர் கோபியை



சந்தித்தார்.

அப்போது, பதிவாளர் கோபி மாணவியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனை அடுத்து வெளியே வந்த மாணவி உறவினரிடம் நடந்ததை கூறியுள்ளார். இதில் ஆத்திரம் அடைந்த உறவினர்கள் பதிவாளர் கோபியை சராமரியாக தாக்கியதாக கூறப்படுகிறது. இதனை அடுத்து படுகாயம் அடைந்த பதிவாளர் கோபி சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், பாலியல் தொல்லைக்கு ஆளான மாணவி கருப்பூர் காவல் நிலையத்தில் பதிவாளர் கோபி மீது புகார் அளித்தார். அதே போல அடையாளம் தெரியாத நபர்கள் தன்னை தாக்கியதாக பதிவாளர் கோபியும் கருப்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.


இரண்டு புகார்களையும் காவல் துறை அதிகாரிகள் விசாரித்தனர். பின்னர் ஆராய்ச்சி மாணவி கொடுத்த புகாரின் பேரில் கருப்பூர் காவல் நிலைய போலீசார், பெண்கள் வன்கொடுமை மற்றும் பெண்களை சீண்டுதல் (354a) தொடர்ந்து தொல்லை தருதல் (354d) உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

பின்னர், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பதிவாளர் கோபி கருப்பூர் காவல் நிலையம் அழைத்துவரப்பட்டார். அங்கு சுமார் ஒரு மணி நேரம் சூரமங்கலம் காவல் உதவி ஆணையர் நாகராஜ் விசாரணை செய்தார். பின்னர் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று கொரோனா பரிசோதனை செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். பின்னர் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.




புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று ஓசைகள் குறைத்து நாள் கூட்டம் கலெக்டர் கவிதா ராமன் தலைமையில் நடைபெற்றது. உடன் டிஆர்ஓ செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கருப்பசாமி, வேளாண்மை இணை இயக்குனர் சக்திவேல், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்த் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505


| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,636 | Rs.5,038 |

## வரலாற்றில் இன்று

1931 எத்தியோப்பியாவின் முதலாவது அரசியலமைப்பை அதன் மன்னர் முதலாம் ஹைலி செலாசி வெளியிட்டார்.

1942 பெரும் இன அழிப்பு: பிரெஞ்சு அரசு பாரிசில் உள்ள அனைத்து 13,152 யூதர்களையும் கைது செய்து அவுசுவிட்சு வதை முகாமுக்கு அனுப்பக் காவற்துறையினருக்கு உத்தரவிட்டது.

1945 மன்காட்டன் திட்டம்: ஐக்கிய அமெரிக்கா புளுட்டோனியம்-கொண்ட அணுக்கரு ஆயுதங்களை நியூ மெக்சிகோ, அலமொகோர்தோ என்ற இடத்தில் வெற்றிகரமாக சோதித்தது.

1948 1948 அரபு - இசுரேல் போர்: இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாசரேத்து நகரத்தை இசுரேல் ஆக்கிரமித்தது.

1950 உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உருகுவே பிரேசிலை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

1950 கொரியப் போர்: அமெரிக்கப் போர்க் கைதிகள் 31 பேர் வட கொரிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

1951 பெல்ஜியம் மன்னர் மூன்றாம் லியோபோல்ட் முடிதுறந்ததை அடுத்து, அவரது மகன் முதலாம் பாடோயின் புதிய மன்னராகப் பதவியேற்றார்.

1965 பிரான்சையும் இத்தாலியையும் இணைக்கும் மோண்ட் பிளாங்க் சுரங்கப் பாதை திறக்கப்பட்டது.

1969 அப்பல்லோ திட்டம்: அப்பல்லோ 11, நிலாவில் தரையிறங்க முதலாவது மனிதரை ஏற்றிக் கொண்டு கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்டது.

1979 ஈராக்கிய அரசுத்தலைவர் அசன் அல்-பாக்கிர் பதவி துறந்ததை அடுத்து சதாம் உசேன் தலைவரானார்.

1983 சில்லி தீவுகளில் பிரித்தானியாவின் உலங்குவானூர்தி வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 20 பேர் உயிரிழந்தனர்.

1989 புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1990 பிலிப்பீன்சில் 7.7 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 1,621 பேர் உயிரிழந்தனர்.

1990 உக்ரைன் சோவியத் குடியரசின் நிலத்துக்கு அக்குடியரசின் நாடாளுமன்றம் உரிமை கோரியது.

1995 காங்கேசன்துறையில் விடுதலைப் புலிகளால் இலங்கை கடற்படையின் எடித்தாரா கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

# பிரசவத்திற்கு பிறகும் கம்பேக் கொடுக்க விரும்பும் இந்திய கிரிக்கெட் வீராங்கனை சினேகா தீப்தி



விசாகப்பட்டினம், ஜூலை. 27:

தனது பிரசவத்திற்கு பிறகு கிரிக்கெட் களத்தில் மீண்டும் தான் கம்பேக் கொடுக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார் இந்திய கிரிக்கெட் வீராங்கனை சினேகா தீப்தி. அதில் தான் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர் 25 வயதான கிரிக்கெட் வீராங்கனை சினேகா. கடந்த 2013 வாக்கில் இந்திய அணியில் அறிமுகமானவர். சர்வதேச டி20 போட்டியில் இந்திய அணிக்காக 16 வயது 204 நாட்களில் அறிமுகமான இளம் வீராங்கனை என அறியப்படுகிறார் அவர். ஸ்மிருதி மந்தனா உடன் இணைந்து கிரிக்கெட் களத்தில் அறிமுகமானவர்.

வங்கதேச அணிக்கு எதிரான ஒரே ஒரு தொடரில் அவர் விளையாடி இருந்தார். அதன் பிறகு அவருக்கு அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதே நேரத்தில் அவரது வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டது.

இந்த இடைப்பட்ட காரணத்தில் அவர் திருமணம் செய்து கொண்டுள்ளார். இப்போது அழகான ஒரு பெண் குழந்தைக்கு தாயாகி உள்ளார் அவர்.

"நான் கருவுற்றது தெரிந்ததும் கிரிக்கெட் களத்தில் மீண்டும் என்னால் கம்பேக் கொடுக்க முடியும் எனது கணவர் எனக்கு நம்பிக்கை கொடுத்தார். இந்த ஓராண்டு காலத்தை விடுப்பு காலமாக கருத சொன்னார். குழந்தை பிறந்ததும் இரண்டே மாதத்தில் பயிற்சிக்கு திரும்பலாம் எனத் தெரிவித்தார். முதலில் அது வேடிக்கையாக இருந்தது.

ஆனால் எனது மகள் பிறந்து இப்போது 8 மாதங்கள் கடந்துவிட்டது. நான் மீண்டும் களத்திற்கு திரும்புவதில் உறுதியாக உள்ளேன்" எனத் தெரிவித்துள்ளார்.




கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


# ரேஷன் அரிசியை கள்ளச்சந்தையில் விற்க கடத்திய இருவர் கைது



**புதுக்கோட்டை, ஜூலை. 27:**

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் ஒருடன் ரேஷன் அரிசியை கள்ளச்சந்தையில் விற்க கடத்திய இருவரை குடிமை பொருள் வழங்கள் குற்றப் புலனாய்வுத் துறையினர் கைது செய்தனர்.

புதுக்கோட்டை குடிமை பொருள் வழங்கள் குற்ற புலனாய்வுத்துறை காவல் உதவி ஆய்வாளர் வேம்பு மற்றும் காவலர்கள் நேற்று இலுப்பூர் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது இலுப்பூர் பேருந்து நிலையம் அருகில் டாட்டா ஏஸ் வாகனத்தில் ரேஷன் அரிசி 1100 கிலோ கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டதை கண்டுபிடித்து வண்டியை பறிமுதல் செய்து அதிலிருந்த முக்கனாமலைபட்டியைச் சேர்ந்த சண்முக மகன் பாண்டியன், இலுப்பூர் ஜீவாநகர் முருகன் மகன் பாண்டியன் ஆகிய இருவரையும் கைது செய்த போலீசார் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதலமைச்சர் அழைப்பு மையத்தில் முதல்வர் ஸ்டாலின் திடீர் ஆய்வு மேற்கொண்டு மக்கள் குறைகளைக் கேட்டறிந்தார்



**சென்னை, ஜூலை. 27:**

சென்னை சோழிங்கநல்லூரில் செயல்பட்டு வரும் முதலமைச்சர் அழைப்பு மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தொலைபேசியில் பொதுமக்களின் புகார் குறித்து கேட்டறிந்தார்.

நாவலூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி முடிந்தபின்னர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது சோழிங்கநல்லூரில் செயல்பட்டு வரும் முதலமைச்சர் அழைப்பு மையத்தில், முதல்வர் ஸ்டாலின் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஈரோட்டிலிருந்து அழைப்பு மையத்தை தொடர்பு கொண்டவரிடம், அவருக்கு வழங்கப்பட்ட மருத்துவ உதவிகள் குறித்து முதல்வர் கேட்டறிந்தார்.

பின்னர், புதுக்கோட்டை மாவட்ட துணை ஆணையர் ஒருவரை தொடர்புகொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அழைப்பு மையத்திற்கு வரும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க காலதாமதமாவது ஏன் என்பது குறித்து கேட்டறிந்தார். அழைப்பு மையத்திற்கு வரும் புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதனைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்ட அலுவலகத்தை முதல்வர் தொடர்பு கொண்டு, அழைப்பு மையத்திற்கு வந்த புகார்களின் மீதான அம்மாவட்ட அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

# கடுகப்பட்டு ஊராட்சியில் தேசிய ஊரக திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது



செய்யூர்:ஜூலை-27

செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர்களுக்கு நேற்று நேரடி கள ஆய்வு மூலம் கடுகப்பட்டு ஊராட்சியில் இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேலை உறுதி திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆர். ராமகிருஷ்ணன் (கி.ஊ) தலைமையிலும், வட்டார வளர்ச்சி அலுவலர் சா.பாபு முன்னிலையிலும், வட்டார பொறியாளர் பி.செந்தில்குமார், பணி மேற்பார்வையாளர் து.அனந்தகிருஷ்ணன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அலுவலர் மு.பாலசுப்ரமணி, கடுகப்பட்டு ஊராட்சி மன்றதலைவர் எ.தேவன், துணை தலைவர் ஜி.மகேஷ், மற்றும் வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலாளர் ம.அறிவுநிதி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர் சங்கத்தின் தலைவர் கே.குமார் மற்றும் நிர்வாகிகள், திட்ட ஒருங்கிணைப்பாளர் க.நீலகண்டன், பணித்தள பொறுப்பாளர் ம.அமலா இவர்கள் அனைவரும் கலந்துகொண்டு கள ஆய்வினை சிறப்பான முறையில் நடத்தப்பட்டது



நாகப்பட்டனம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் அ.அருண்தம்புராஜ், திருநங்கைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாவினை வழங்கினார்.

## நேஷனல் ஹெரால்டு வழக்கு

# அமலாக்கத்துறை முன்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி 2வது நாளாக ஆஜர்



டெல்லி, ஜூலை. 27:

நேஷனல் ஹெரால்டு பண மோசடி வழக்கில் வழக்கில் காங்கிரஸ் இடைக்கால தலைவர் சோனியாகாந்தி 2வது நாளாக நேற்று அமலாக்கத்துறை விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

கடந்த 1938ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவால் தொடங்கப்பட்டது "நேஷனல் ஹெரால்டு பத்திரிகை நிறுவனம்". சுதந்திரத்திற்கு பிறகு காங்கிரசின் குரலாக ஒலித்து வந்த நிலையில் கடந்த 2008ம் ஆண்டு ரூ.90 கோடிக்கும் மேலான கடன் சுமையால் அந்நிறுவனம் மூடப்பட்டது. இந்நிலையில் நேஷனல் ஹெரால்டு நிறுவனத்தை சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தியால் தொடங்கப்பட்ட "யங் இந்தியா லிமிடெட்"என்ற நிறுவனம் 2010-ம் ஆண்டில் கையகப்படுத்தியது.

இதில் நேஷனல் ஹெரால்டு நிறுவனத்தின் 1,057 பங்குதாரர்களுடன் எவ்வித ஆலோசனை செய்யாமல் 50 லட்சம் ரூபாய்க்கு தொடங்கப்பட்ட 'யங் இந்தியா' நிறுவனத்திற்கு மாற்றப்பட்டதில் 2,000 கோடி ரூபாய் வரை ஆதாயம் அடைந்துள்ளதாக கூறி பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த பரிவர்த்தனைகளை அடிப்படையாக கொண்டு சட்டவிரோத பண பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் சோனியா காந்தி, ராகுல்காந்தி மீது வழக்குப்பதிவு செய்த அமலாக்கத்துறை விசாரணை நடத்தி வருகிறது. அதுதொடர்பாக விசாரணைக்கு ஆஜராக ராகுல் காந்தி, சோனியா காந்தி ஆகியோருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி இருந்தது. அதன்படி, ராகுல் காந்தி கடந்த மாதம் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தார். 5 நாட்களில் 50 மணி நேரத்துக்கு அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கில் காங்கிரஸ் இடைக்கால தலைவர் சோனியாகாந்தி கடந்த 21ம் தேதி ஆஜராகி விளக்கம் அளித்தார். 3 மணி நேரம் அவரிடம் விசாரணை நடைபெற்றது. அதை தொடர்ந்து நேற்று 2வது நாளாக அமலாக்கத்துறை முன்பு சோனியா காந்தி ஆஜரானார். சோனியா காந்தியுடன் அவரது மகள் பிரியங்கா காந்தியும் வந்தார்.

இதனிடையே சோனியா காந்தியிடம் அமலாக்கத்துறை விசாரணை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் எம்பிக்கள் நடைபயணம் மேற்கொண்டு தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

# கிறிஸ்தவ மிஷினரி இல்லையென்றால் தமிழ்நாடு பீகார் ஆகியிருக்கும் சபாநாயகர் அப்பாவு



**சென்னை, ஜூலை. 27:**

தமிழகத்தின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்கள் பெரும்பங்காற்றியுள்ளனர் என்றும் அவர்கள் இல்லையென்றால் தமிழ்நாடு பீகார் ஆகியிருக்கும் என்றும் சபாநாயகர் அப்பாவு பேசிய பழைய வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் அதிகளவு பகிரப்பட்டு வருகிறது.

தமிழக சபாநாயகர் அப்பாவு மற்றும் திமுக எம்.எல்.ஏ இனிகோ இருதய ராஜ் ஆகியோர் கடந்த மாதம் 28ம் தேதி திருச்சியில் உள்ள செயிண்ட் பால் சர்ச்சில் நிடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியது தற்போது சர்ச்சையாகி வருகிறது. இதுதொடர்பாக ஏ.என்.ஐ. ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், அப்பாவு நிகழ்ச்சியில் பேசும்போது, கிறுஸ்தவ பாதிரியார்கள் சிஸ்டர்களும் இல்லையென்றால் தமிழ்நாடு பீகார் போல் ஆகியிருக்கும். நான் இன்று இந்த நிலையில் இருப்பதற்கு காரணமே கத்தோலிக்க பாதிரியார்கள் மற்றும் சிஸ்டர்கள்தான். இந்த அரசை உருவாக்கியது நீங்கள்தான்.

உங்களின் பிரார்த்தனைகளையும் விரதமும் இந்த அரசாங்கத்தை உருவாக்கியது. திராவிட மாடல் அரசாங்கம் மற்றும் சமூக நீதிக்கு கத்தோலிக்க பாதரியார்கள் மற்றும் கத்தோலிக்க கிறுஸ்தவர்கள் தான் முக்கிய காரணம். நீங்கள் (கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்) யாரையும் சார்ந்திருக்க தேவையில்லை. உங்கள் பிரச்சனைகளை பட்டியலிட்டு நேரடியாக முதலமைச்சரிடம் கொடுங்கள். அவர் எதையும் மறுக்கமாட்டார்.

ஏனெனில் இந்த அரசாங்கத்திற்கு நீங்கள் தான் காரணம் என்பது முதலமைச்சருக்கு தெரியும். இது உங்கள் அரசாங்கம் மற்றும் உங்கள் முதலமைச்சர். இதில் நான் உங்களுடன் இருக்கிறேன். தமிழகத்தில் இருந்து கிறிஸ்தவர்களை அகற்றினால் வளர்ச்சி இருக்காது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் முக்கிய காரணம். இன்றைய தமிழகம் உங்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது' என்று பேசியதாக குறிப்பிட்டுள்ளது. தற்போது இந்த பேச்சுக்கு இந்து அமைப்புகள் மற்றும் பாஜகவிடம் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக ஏ.என்.ஐ. ஊடகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாஜக துணை தலைவரும் செய்தி தொடர்பாளருமான நாராயணன் திருப்பதி 'இதுதான் திமுகவின் மதச்சார்பின்மையா? தங்களை மதச்சார்பற்ற கட்சி என்று சொல்லிக்கொள்ளும் உரிமையை அவர்கள் இழந்துவிட்டனர். திமுக இந்துக்களுக்கு எதிரான கட்சி என்பதை இப்போது இது நிரூபித்துள்ளது' என பதிவிட்டுள்ளார்.

இந்த சர்ச்சை தொடர்பாக ஏ.என்.ஐ. ஊடகத்துக்கு விளக்கம் அளித்துள்ள சபாநாயகர் அப்பாவு, பாஜக எனது பேச்சை விளம்பரப்படுத்தினால் அது நல்லது. நான் அப்படி சொல்லவில்லை என்று சொல்லமாட்டேன். ஆம், நான் அப்படித்தான் சொன்னேன். ஆனால் சமூக வலைதளங்களில் ட்ரிம் செய்யப்பட்ட பதிப்புகள் மட்டுமே பரப்பப்படுகின்றன. நான் பேசியது வரலாற்று உண்மை. இதில் அரசியல் இல்லை' என கூறியுள்ளார்.

# பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் பொன்விழாத் தொடக்கவிழா





நெல்லை, ஜூலை.27-
பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில்பொன்விழாத் தொடக்கவிழா, பி.எஸ்.கே.வி.பல்லாக் லெப்பை கட்டடத் திறப்பு விழா, கல்லூரித் தாளாளர் த.இ.செ. பத்ஹுர்ரப்பானி எழுதிய அறிவுப் பணியில் அரை நூற்றாண்டு நூல் வெளியீட்டு விழா கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் சே.மு.அப்துல் காதர் வரவேற்றுப் பேசினார். ஆட்சிக் குழுத் தலைவர் வாவு எஸ்.செய்யது அப்துர் ரஹ்மான் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரித் தாளாளர் த.இ.செ. பத்ஹுர் ரப்பானி பொன்விழாவைத் தொடங்கிவைத்துத் தொடக்கஉரையாற்றினர்.

ஆட்சிக்குழுப் பொருளாளர் ஹெச்.எம்.ஷேக் அப்துல் காதர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் எம்.கே.எம்.முஹம்மது நாசர், பொறியாளர் எல். கே.எம்.ஏ.முகம்மது நவாப் ஹுசேன், பி.எஸ்.எம். இல்யாஸ், பேராசிரியர் எஸ்.அபுபக்கர், மூத்த பொதுக்குழு உறுப்பினர் காதர்மைதீன், முஸ்தபா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பி.எஸ்.கே.வி.பல்லாக் லெப்பை கட்டடத் திறப்பு விழா பல இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பி.எஸ். கே.வி. பல்லாக் லெப்பை கட்டடத்தை தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு திறந்துவைத்தார். திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலை உரையாற்றினர்.

மாணவர் பேரவைப் பொறுப்பாளர்கள் முகம்மது பர்வேஷ், முகம்மது சலாகுதீன் ஆகியோர் சட்டமன்றத் தலைவர் மு. அப்பாவுக்கு மலர்மாலை அணிவித்தனர்.

கல்லூரிப் பொன்விழாவை முன்னிட்டு கல்லூரி வளர்ச்சியை உணர்த்தும் கட்டுரைகளோடு கல்லூரித் தாளாளர் த.இ.செ.பத்ஹுர் ரப்பானி எழுதிய அறிவுப் பணியில் அரை நூற்றாண்டு நூலை தமிழகசட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு வெளியிட ஆட்சிக்குழுத் தலைவர் வாவு எஸ். செய்யது அப்துர்ரஹ்மான் அதன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

50 ஆண்டுகாலம் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி ஆட்சிக்குழுச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கல்லூரியை வழிநடத்தி வரும் த.இ.செ.பத்ஹுர் ரப்பானிக்குதமிழகசட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு தாளாண்மை - 50 எனும் பொன்விழா நாயகர் விருதுக் கேடயத்தை வழங்கினார். கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் ச.மகாதேவன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினார். கல்லூரியின் துணை முதல்வர் எஸ்.எம்.ஏ.செய்யது முஹம்மது காஜா நன்றி கூறினார்.

# மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவிக்க சென்ற திமுகவினர்



திருவள்ளூர், ஜூலை.27-
திருவள்ளூர் மாவட்டம்கீழச்சேரி அரசு உதவிபெறும் பெண்கள் மேனிலைப்பள்ளியில் பயிலும் திருத்தணி தெக்களூரை சேர்ந்த பிளஸ் டூ மாணவி சரளா தூக்கிட்டு சந்தேகமான மரணமடைந்த நிலையில் திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையில் மணவியின் உடல் வைக்கப்பட்ட இடத்தில் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவிக்க திமுக திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் பூபதி, திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி. எஸ்.சந்திரன், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன், திருவள்ளூர் நகர்மன்ற முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், நகர்மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், திருவாலங்காடு ஒன்றியக் குழுதுணைபெருந்தலைவர் மகாலிங்கம், நகர்மன்ற உறுப்பினர் டி.கே.பாபு, நேதாஜி, திலிபன் உட்பட பலர் வந்திருந்து ஆறுதல் தெரிவித்தனர்

சீர்காழி புதிய பஸ் நிலையம் எதிரில் டெல்லியில் கைது செய்யப்பட்ட

# ராகுல் காந்தியை விடுதலை செய்யக்கோரி காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்



சீர்காழி, ஜூலை.27-
சீர்காழி புதிய பஸ் நிலையம் எதிரில் டெல்லியில் கைது செய்யப்பட்ட ராகுல் காந்தியை விடுதலை செய்யக்கோரி காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாநில பொதுச் செயலாளர் கே. பி. எஸ். எம். கனிவண்ணன் தலைமை தாங்கினார்.

நகர தலைவர் லட்சுமணன், வட்டார தலைவர் பாலசுப்பிரமணியன், ஞானசம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் டெல்லியில் கைது செய்த ராகுல் காந்தியை உடனே விடுதலை செய்ய வேண்டும், காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தியை விசாரணை என்ற பெயரில் அலக்கழிக்க கூடாது.

காங்கிரஸ் கட்சியினர் மீதுபொய்வழக்குபோடும் அமலாக்க துறையை கண்டித்தும் உள்ளிட்ட பல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் வட்டார தலைவர் ராதாகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட இளைஞரணி தலைவர் சரவணன், வட்டார துணைத் தலைவர்கள் தென்னரசு, ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் கிள்ளிவளவன், கட்சி நிர்வாகி ஆறுமுகம், மொராஜ், அம்பேத்கார் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.



இராஜா அண்ணாமலைபுரம் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தலைமையில் மாமல்லபுரத்தில் 28-07-2022 முதல் 10-08-2022 வரை நடைபெறவுள்ள 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளையொட்டி வரும் சுற்றுலா பயணிகளுக்கு இனிமையான பயண அனுபவம் ஏற்படும் வகையில் ஆட்டோ ஓட்நர்களின் திறமையை மேம்படுத்தவும், பயணிகளிடம் அவர்களின் அனுகுமுறையினை நெறிப்படுத்தவும் சுற்றுலாத் துறை சார்பில் செயல்படும் சுற்றுலா நட்பு ஆட்டோ வாகன ஓட்டுநர்களுக்காக நடைபெற்ற அன்பான அனுகுமுறை என்ற பயிற்சிக் கூட்டத்தினை நிறைவில் பங்குபெற்ற ஆட்டோ ஓட்டுநர்கள் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்,

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



மாமல்லபுரத்தில் 28-07-2022 முதல் 10-08-2022 வரை நடைபெறவுள்ள 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் கலந்து கொள்ள அங்கோலா நாட்டிலிருந்து வருகை புரிந்த போட்டியாளர்கள் நேற்று சென்னை விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள செஸ் ஒலிம்பியாட் போட்டியின் தம்பி சின்னத்திற்கு அருகில் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

# திட்டச்சேரியில் பேரூராட்சி சார்பில் ஒட்டுமொத்த தூய்மை பணி



நாகப்பட்டினம், ஜூலை.27-
திட்டச்சேரி பேரூராட்சி சார்பில் ஒட்டுமொத்த தூய்மை பணி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் ஆயிஷா சித்திக்கா தலைமை தாங்கினார். பேரூராட்சி செயல் அலுவலர் கண்ணன் முன்னிலை வகித்தார்.

இதில் பொது மக்களுக்கு ஸ்வச்சதா செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவது, குப்பைகளை தரம்பிரித்து கொடுப்பது குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது. இந்த பேரணி பேரூராட்சி வளாகத்தில் ஆரம்பித்து திட்டச்சேரி கடை தெரு, பஸ் நிலையம், கொந்தகை கடை தெரு வரை சென்று மீண்டும் பேரூராட்சி வளாகத்தில் முடிவடைந்தது.

அதை தொடர்ந்து அனைத்துதெருக்களிலும் ஒட்டுமொத்த தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் மற்றும் வணிகர்களுக்கு பிளாஸ்டிக் பை பயன்படுத்துவதை தவிர்த்து துணிப்பையை பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மஞ்சப்பை மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரதிநிதிகளுக்கு திடக்கழிவை உரமாக்குதல் குறித்து உரம் தயாரிக்கும் மையத்திற்கு அழைத்து சென்று விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் பேரூராட்சி இளநிலை உதவியாளர் கோவிந்தராஜ், வரி தண்டலர் ஜெகவீரபாண்டியன், அலுவலக உதவியாளர் மாதவன், அமானுல்லா, அண்ணாதுரை, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், மன்ற உறுப்பினர்கள், பள்ளி மாணவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை, ராஜன் தோட்டம் சாய் மைதானத்தில் 44வது செஸ் ஒலிம்பியாட் ஜோதியின் மாதிரி சுடரினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா.எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், ஆகியோரிடம் நேற்று சர்வதேச தடகள விளையாட்டு வீராங்கனை மயிலாடுதுறை மாவட்ட தங்க மாளிகை ஆர்.சித்ரா, சர்வதேச கையுந்து இந்திய வீராங்கனை ஜி.ர.சுவாதிகா, தேசிய மாரத்தான் விளையாட்டு வீரர் எஸ்.வினோத் குமார், ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், மயிலாடுதுறை நகர்மன்றத் தலைவர் செல்வராஜ், மயிலாடுதுறை ஒன்றியக்குழுத் தலைவர் காமாட்சி மூர்த்தி, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஜெ.பாலாஜி, மயிலாடுதுறை மாவட்ட செஸ் ஒலிம்பியாட் ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீர் பாண்டியன், அசிரியர்கள் விளையாட்டு வீரர்கள்-வீராங்கனைகள், பள்ளி மாணவ-மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

பெருந்தலைவர் காமராஜர் 120 வது பிறந்த நாளையொட்டி

# ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கினார்



திருவள்ளூர், ஜூலை.27-
திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் பேரம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் கர்மவீரர் காமராஜரின் 120 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்ட தலைவர் ஏ ஜி சிதம்பரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஆயிரம் ஏழை எளிய மக்களுக்கு நலதிட்ட உதவி வழங்கப்பட்டது.

இதில் சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆகியோர்களால்நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

மேலும் இந்நிகழ்ச்சி ஏற்பாடானது கடம்பத்தூர் மேற்கு வட்டார தலைவர் பேரம்பாக்கம் சதீஷ், ஏற்பாடு செய்தனர். இதனைத்தொடர்ந்து இக்கூட்டத்தில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் கூறுகையில் அக்னி பாத் வேலை திட்டத்தின் வாயிலாக தமிழகத்தில் உள்ள வாலிபர்களின் எதிர்காலத்தை எதுக்கும் உதவாதபடி மக்களை ஏமாற்றிகொண்டிருக்கிறது.

மோடி அரசு என்று குற்றச்சாட்டு வைத்துள்ளார், மற்றும் இந்நிகழ்வில் மாநில துணைத் தலைவர் ஏகட்டூர் ஆனந்தன், மாநில செயலாளர் குணாநிதி, சிபி, மோகன்தாஸ், திருவள்ளூர் நகரத் தலைவர் ஜான், மாவட்ட செயலாளர் பண்ணுர் கிரிதராஜ், கடம்பத்தூர் வட்டார பொருளாளர் பேரம்பாக்கம் லலிதா குப்பன், மாவட்ட பொறுப்பாளர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆர்.சசிகுமார் மாநில செயலாளர் திவாகர் இளைஞர் காங்கிரஸ் ஓ பி சி பிரிவு மாநில செயலாளர் ஜே.கே.வெங்கடேஷ் ஆகியோர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

# தாம்பரத்தில் தேனீக்களின் படையெடுப்பால் தெரித்தோடிய பொதுமக்கள்



செங்கல்பட்டு, ஜூலை.27-
செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் ஷண்முகம் சாலையில் உள்ள பிலிப்ஸ் மருத்துவமனை கட்டிடத்தில் தேனீக்கள் மிகப்பெரிய கூடு கட்டி இருந்தது.

தேனீக்களை அப்புறப்படுத்த அந்த கட்டிட உரிமையாளர் சென்னை பாடி பகுதியில் இருந்து வடமாநில இளைஞர்களை வரவழைத்துள்ளார்கள்.

நேற்று அதிகாலை வந்த, 5க்கும் மேற்பட்ட வட மாநிலவர்கள் தேனீக்களை தீயிட்டு கொளுத்தி எடுத்தனர். அப்போது யாரும் எதிர்பாராத நிலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேனீக்கள் சாலைகளில் உல்லாசமாக பறக்க தொடங்கியது.

இதை சற்றும் எதிர் பாராதமக்கள்தேனியிடம் இருந்து கடி வாங்காமல் இருப்பதற்கு சாலையில் அங்கும் இங்கும் தெறித்து ஓடினர்.பின்னர் தேனீக்களை பிடித்த வடமாநிலத்தவர்கள் அதே கட்டிடத்திற்கு கீழ் வைத்து விற்பனை செய்துவந்தனர்.இதனால் அந்த பகுதி முழுவதும் தேனீக்களுடைய வசிப்பிடமாக மாறியது.

இதனால் சிறிது நேரத்திற்குபோக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இச்சம்பவம் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மேற்கு தாம்பரம் காவல் துறையினர் கட்டிட உரிமையாளரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

பின்னர் வடமாநில இளைஞரான ராம்சந்திரனை காவல் நிலையத்துக்கு அழைத்து சென்ற போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது தொடர்ந்து இது போல காரியங்களில் வட மாநில இளைஞர்கள் செய்து விடுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

# நாகூர் –நன்னிலம் சாலையில் ஆபத்தான நிலையில் உள்ள மின்கம்பம் மாற்றி அமைக்கப்படுமா?: பொதுமக்கள் எதிர்பார்ப்பு



நாகப்பட்டினம், ஜூலை.27-
நாகூர்-நன்னிலம் சாலையில் ஆபத்தான நிலையில் உள்ள மின்கம்பம் மாற்றி அமைக்கப்படுமா? என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் 500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.நாகூரில் இருந்து மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு பனங்குடி ஊராட்சி பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மேற்கண்ட பகுதியில் சேர்ந்த மக்கள் அன்றாடம் நாகூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று வர நாகூர்-நன்னிலம் சாலையை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர்.

இந்த நிலைகள் வாஞ்சூர் ரவுண்டானா பனங்குடி இடையே உள்ள மின்கம்பம் ஒன்று சிமெண்ட் காரைகள் முழுவதும் பெயர்ந்து ஆபத்தான நிலையில் உள்ளது.

அதேபோல் எதிரே புதுமனை தெருவில் உள்ள மின்கம்பம் ஒன்று சாய்ந்து மின்கம்பிகள் தாழ்வாக செல்கிறது. இதனால் சாலை வழியே செல்லும் பொதுமக்கள் இந்நேரத்திலும்மின்கம்பம் சாய்ந்து விழுந்து விபத்து ஏற்படுமா? என்ற அச்சத்துடனே சென்று வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம்பலமுறை புகார் அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படும் முன்னர் ஆபத்தான நிலையில் உள்ள மின்கம்பத்தை மாற்றி அமைத்து தர வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை எடுத்துள்ளனர்.



புதுடெல்லியில், ஒன்றிய விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய எம்.சிந்தியாவை தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய விமான நிலையங்களின் விரிவாக்க பணிகள் மற்றும் தமிழ்நாடில் விமான பயிற்சிப் பள்ளி அமைப்பது குறித்தும் விவாதித்தார். இந்நிகழ்வின் போது இந்திய விமான நிலைய ஆணையக தலைவர் சஞ்சீவ் குமார், சிவில் விமானப் போக்குவரத்து இணைச் செயலாளர் ராஜீவ் பன்சால், இந்திய விமான நிலைய ஆணையக இணைச் செயலாளர் ரூபினா அலி, தமிழ்நாடு அரசின் தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு இல்லம் உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் சாட்டர்ஜி ஆகியோர் உடனிருந்தனர்.



44 வது செஸ் ஒலிம்பியாட் போட்டியினை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் வளாகத்தில் இருந்து மாவட்ட விளையாட்டு மைதானம் வரை, சதுரங்க ஒலிம்பியாட் ஜோதி விழிப்புணர்வு பேரணியை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட கலெக்டர் கவிதா ராமு, புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, டிஆர்ஓ செல்வி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கேகே செல்ல பாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்

### நேஷ்னல் ஹெரால்டு வழக்கில்

# சோனியா காந்தி அமலாக்கத்துறை விசாரணை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சித்தாமூர் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**செங்கல்பட்டு , ஜூலை. 27:**

இந்தியா முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் சார்பில் சோனியா காந்தி மீது போடப்பட்ட பொய் வழக்கை கண்டித்து பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.



அதன்படி செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் அருகே வட்டாரத் தலைவர் சிவா தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொது செயலாளர் மகாலிங்கம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்

கட்சியினர் திரளாக கலந்து கொண்டு மத்திய அரசின் கைக்கூலியாக செயல்படும் அமலாக்கத்துறை என கோஷங்கள் எழுப்பி சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் சி. ஆர்.பெருமாள், வட்டார தலைவர்கள் மாரியப்பன், தாமோதரன் வழக்கறிஞர் அணி ஆகாஷ் பேச்சாளர் கோட்டை தயா உள்ளிட்டோர் கலந்துகொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கீழ முர்க்கரை மீனவ கிராமத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கல்

*சீர்காழி, ஜூலை. 27:*

சீர்காழி அருகே கீழமூவர்க்கரை மீனவ கிராமத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் விழா நடைபெற்றது.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தென்னாம்பட்டினம் ஊராட்சி கீழ மூவர்கரை மீனவ கிராமத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் லலிதா தலைமை வகித்தார், சீர்காழி எம்எல்ஏ பன்னீர்செல்வம், சீர்காழி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கமலஜோதிதேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், தென்னாம்பட்டினம் ஊராட்சி மன்ற தலைவர் சரளா வரவேற்றார். கீழமூவர்கரை சுனாமி நகரில் குடியிருக்கும் 122 நபர்களுக்கு சுமார் 16,83,600 மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டாக்களை மாவட்ட கலெக்டர் லலிதா, எம் எல் ஏ பன்னீர்செல்வம் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

இதில் சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் கமலஜோதிதேவேந்திரன், டிஆர்ஓ முருகதாஸ், ஆர்டிஓ அர்ச்சனா, சீர்காழி தாசில்தார் செந்தில்குமார், வட்ட வழங்கல் அலுவலர் சபிதா, மண்டல துணை வட்டாட்சியர் ரவிச்சந்திரன் மற்றும் வருவாய் துறையினர் ஊர் பஞ்சாயத்தார்கள் கலந்து கொண்டனர் அப்பகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

### பள்ளி மாணவி இறப்பு

# கள்ளக்குறிச்சி டிஎஸ்பி ராஜலட்சுமி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்.. டிஜிபி உத்தரவு

**சென்னை , ஜூலை. 27:**

பள்ளி மாணவி இறப்பு மற்றும் கலவரம் தொடர்பாக கள்ளக்குறிச்சி மாவட்ட டிஎஸ்பி ராஜலட்சுமியை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி டிஜிபி சைலேந்திரபாபு உத்தரவிட்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் கனியாமூர் கிராமத்தில் இயங்கி வந்த தனியார் பள்ளியில் பிளஸ்-2 மாணவி மர்மமான முறையில் கடந்த 13ம் தேதி உயிரிழந்தார். மாணவியின் இறப்பில் மர்மம் இருப்பதாக கூறி அவரது பெற்றோர் மாணவியின் உடலை வாங்க மறுத்து பள்ளி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்க கோரி தொடர் போராட்டம் நடத்தி வந்தனர். பள்ளி முன்பு அமைதியான முறையில் நடந்து வந்த போராட்டம் திடீரென கடந்த 17ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வன்முறையில் முடிந்தது. இதனால் மாணவி படித்த பள்ளி மற்றும் பள்ளி வாகனங்கள் அனைத்தும் தீவைத்து சூறையாடப்பட்டது.

கலவரத்தை தடுக்க முயன்ற டிஐஜி பாண்டியன் உட்பட 52 போலீசார் படுகாயமடைந்தனர். இதையடுத்து பள்ளி மாணவி இறப்பு விவகாரத்தில் சரியான முறையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காவல்துறை எடுத்து இருந்தால் பெரிய அளவில் கலவரம் நடைபெற்று இருக்காது என்று பரவலாக குற்றச்சாட்டு எழுந்தது. அதைதொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர், மாவட்ட எஸ்பி செல்வகுமார் அதிரடியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். அதில் எஸ்பி செல்வகுமார் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். அதைதொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு புதிய கலெக்டராக ஷ்ரவன்குமார் ஜடாவத் மற்றும் மாவட்ட எஸ்பியாக சென்னை திருவல்லிக்கேணி துணை கமிஷனர் பகலவன் நியமிக்கப்பட்டனர்.

இதற்கிடையே கலவரம் மற்றும் மாணவி மரணம் தொடர்பாக கள்ளக்குறிச்சி டிஎஸ்பி ராஜலட்சுமி அதிரடியாக பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு டிஜிபி அலுவலக காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். அதற்கான உத்தரவை டிஜிபி சைலேந்திரபாபு உத்தரவிட்டுள்ளார். இதைத்தொடர்ந்து, கள்ளக்குறிச்சிக்கு புதிய டிஎஸ்பியாக அரக்கோணம் டிஎஸ்பி புகழேந்தி கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.




# சோத்துப்பாளை கைலாசநாதர் ஆலயத்தில் பிரதோஷ வழிபாடு கோலாகலம்

*ஆதனக்கோட்டை, ஜூலை.27–*

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள சோத்துப்பாளை கிராமத்தில் பிரசித்திபெற்ற ஸ்ரீகைலாசநாதர் உடனுறை செங்கமலநாச்சியம்மன் ஆலயத்தில் பிரதோஷ வழிபாடு வெகு விமரிசையாக நடைபெற்றது.



இந்த பிரதோஷ விழாவில் சந்தன அபிஷேகம் பன்னீர் அபிஷேகம் பால் அபிஷேகம் தயிர் அபிஷேகம் இளநீர் அபிஷேகம் அரிசி மாவு அபிஷேகம் திரவிய பொடி அபிஷேகம் உள்ளிட்ட 9 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது.

பின்னர் நந்தி பகவான் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. இதில் சோத்துப்பாளை கிராமத்தை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# பள்ளிக்கு வராத மாணவர்களைக் கண்டறிந்து உடனடியாக சேர்க்க வேண்டும்

## ஆசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை உத்தரவு

சென்னை

பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து மீண்டும் பள்ளிகளில் சேர்க்கும் திட்டம் தொடர்பாக புதிய வழிகாட்டுதல்களை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான வழிகாட்டுதலில் , புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளையும் கண்டறிந்து பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், 4 வாரங்களுக்கு மேல் பள்ளிக்கு வராத மாணவர்களைக் கண்டறிந்து உடனடியாக பள்ளிகளில் சேர்க்க வேண்டும். கல்வியாண்டின் இறுதியில் கணக்கெடுப்பு நடத்தாமல், 4 வாரங்களுக்கு மேல் பள்ளிக்கு வராமல் இருக்கும் மாணவர்களைக் கண்டறிந்து பள்ளியில் சேர்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். EMIS இணையதளம், செயலி மூலம் கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், பள்ளிக் கட்டணம் கட்டாதது, உடல்நல பிரச்சனை, குழந்தைத் திருமணம், இடப்பெயர்வு உள்ளிட்ட காரணங்களால் இடைநின்ற மாணவர்களை கண்டறிவதில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். 5,8,10-ம் வகுப்பு முடித்த மாணவர்கள் முறையாக அடுத்தடுத்த வகுப்புகளில் சேர்ந்துள்ளனரா என்பதை உறுதி செய்ய வேண்டும். 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க தனிக் கவனம் செலுத்த வேண்டும். என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# காதல் திருமணம் செய்த புதுமண தம்பதி வெட்டி படுகொலை.. கோவில்பட்டியில் பரபரப்பு

**தூத்துக்குடி, ஜூலை. 27:**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள வீரப்பட்டி கிராமம் சேவியர் நகரில் காதல் திருமணம் செய்த புதுமண தம்பதி மாணிக்கராஜ், ரேஸ்மா இருவரும் வீட்டில் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள வீரப்பட்டி கிராமம் சேவியர் நகரை சேர்ந்தவர் முத்துக்குட்டி (50). லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறார். இவரது மகள் ரேஸ்மா (19), கோவில்பட்டியில் உள்ள கல்லூரியில் 2ஆம் ஆண்டு படித்து வந்தார். அதே ஊரைச் சேர்ந்த வடிவேல் என்பவரது மகன் மாணிக்கராஜ் (28).

வெளிநாட்டில் வேலை பார்த்த மாணிக்கராஜ் ஊருக்கு திரும்பி கூலி வேலை பார்த்து வந்துள்ளார். மேலும் முத்துக்குட்டி, மாணிக்கராஜ்க்கு மாமா முறை என்று கூறப்படுகிறது. மாணிக்கராஜ்க்கும், ரேஸ்மாவுக்கும் காதல் ஏற்பட்டு காதலித்து வந்துள்ளனர். இந்த காதலுக்கு முத்துக்குட்டி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது மகளுக்கு முத்துக்குட்டி வேறொரு மாப்பிள்ளை பார்த்து வந்துள்ளார். இதற்கிடையில் கடந்த மாதம் வீட்டை விட்டு வெளியேறி மாணிக்கராஜ் மற்றும் ரேஷ்மா இருவரும் கடந்த 28 ஆம் தேதி மதுரை திருமங்கலத்திற்கு சென்று காதல் திருமணம் செய்துள்ளனர். திருமணம் செய்த பிறகு ஊருக்கு வராமல் இருந்த தம்பதியினர் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஊருக்கு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மதியம் மாணிக்கராஜ் - ரேஷ்மா வீட்டில் தனியாக இருந்த போது, முத்துக்குட்டி இருவரையும் அரிவாளால் சரமாரியாக வெட்டி விட்டு தப்பியோடியதாக கூறப்படுகிறது. இதனால் அந்த தம்பதி, ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தனர்.

இது குறித்து தகவல் கிடைத்தும் எட்டயபுரம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று தம்பதியின் உடல்களை மீட்டு உடற்கூறாய்வுக்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் எட்டயபுரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கொலை செய்துவிட்டு தலைமறைவாக உள்ள ரேஷ்மாவின் தந்தை முத்துக்குட்டியை கைது செய்த பின்னர் தான், இந்த கொலைக்கான முழு விபரம் தெரியவரும் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

# ஆவுடையார்கோவில் அருகே தீமிதி திருவிழா

*ஆவுடையார்கோவில், ஜூலை. 27:*

ஆவுடையார்கோவில் அருகே தீயத்தூர் வடகோட்டை ஸ்ரீ மழை மாரியம்மன் ஆலய ஆடி திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் தீ மிதித்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றினர்.




புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் ஒன்றியத்துக்கு உட்பட்ட தீயத்தூர் வடகோட்டை பகுதியில் உள்ள ஸ்ரீமழைமாரியம்மன் ஆலயத்தில் ஆடி மாத திருவிழா கடந்த 17-ம் தேதி காப்பு கட்டுதலுடன் திருவிழா தொடங்கியது. நேற்று 10-ம் நாள் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக தீ மிதி திருவிழா நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள், காவடி பால்குடம்,

அழகு வேல் குத்தியும் தங்களது குழந்தைகளுடன் தீமிதித்து வேண்டுதலை நிறைவேற்றினர். சுற்றி உள்ள கிராம பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து ராட்சத பலூன் மூலம் விழிப்புணர்வு

**சென்னை, ஜூலை. 27:**

சென்னை மாமல்லபுரத்தில் சர்வதேச 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி வருகிற 28-ஆம் தேதி தொடங்குகிறது. இதையொட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் மாநிலம் முழுவதும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.



பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவுரையின் பேரில் திருவண்ணாமலை அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதன்படி திருவண்ணாமலை அண்ணா நுழைவாயில் அருகில் உள்ள ஏ.எஸ்.மோட்டார்ஸ் கட்டிடத்தின் மாடியில் ராட்சத பலூன் பறக்க விடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து அண்ணா நுழைவாயில் அருகில் உள்ள கருணாநிதி சிலை எதிரில் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி பாடல் காட்சிப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு அருணை மருத்துவக் கல்லூரி இயக்குனர்கள் எ.வ.வே. கம்பன் தலைமை தாங்கினார். சி.என். அண்ணாதுரை எம்.பி., எம்.எல்.ஏக்கள் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பெ.சு. தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு ராட்சத பலூனை பறக்க விட்டு, அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஏ.எஸ்.மோட்டார்ஸ் உரிமையாளர் சீனிவாசன், தி.மு.க. மாவட்ட பொருளாளர் பன்னீர்செல்வம், நகர செயலாளர் கார்த்திக் வேல்மாறன், பொதுக்குழு உறுப்பினர் பிரியா விஜயரங்கன், மாவட்ட அமைப்பாளர் டி.வி.எம். நேரு, நிர்வாகிகள் கலைமணி, ஏ.ஏ.ஆருமுகம், கென்னடி உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

# சீர்காழி அருகே திருமுல்லைவாசல் ரோட்டரி சங்கம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி

*சீர்காழி , ஜூலை. 27:*

சீர்காழி அருகே திருமுல்லைவாசல் ரோட்டரி சங்கம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு 30க்கு மேற்பட்டவர்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கி கவுரவிப்பு, 10, +2 மாணவர்கள் முதல் மூன்று இடம் பிடித்த மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கி பாராட்டினர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருமுல்லைவாசல் ரோட்டரி சங்கம் புதிய பொறுப்பாளர்கள் பதவியேற்பு விழா மாவட்ட ஆளுநர் செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் திருமுல்லைவாசல் ரோட்டரி சங்க புதிய தலைவராக சின்னையன், செயலாளராக தெய்வராஜ் பொறுப்பேற்றுக் கொண்டனர். முன்னதாக கொரோனா தொற்று காலத்தில் தடையின்றி தற்போது வரை ஊராட்சி முழுவதும் தூய்மைப் பணியாளர்கள் சுத்தமாக வைத்துள்ளனர் அவர்களை கவுரவிக்கும் விதமாக 30க்கும் மேற்பட்டோர்களுக்கு 10 கிலோ அரிசி மூட்டை வழங்கி கவுரவித்தனர்.

பின்னர் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுதேர்வில் வெற்றி பெற்று முதல் மூன்று இடம் பிடித்த மாணவர்களை கௌரவித்து புத்தகங்கள் வழங்கினர். இதில் ரோட்டரி சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் திரளானோர் கலந்து கொண்டனர்.

# வண்ணார்பேட்டையில் காங்கிரசார் ஆர்ப்பாட்டம்

**சென்னை , ஜூலை. 27:**

விசாரணை என்ற பெயரில் காங்கிரஸ் தலைவி சோனியாவை அழக்களிக்கும் அமலாக்க துறையை கண்டித்து வண்ணாரப்பேட்டை காங்கிரஸ் அலுவலகம் முன்பு அறவழி தருண போராட்டம் நடந்தது. மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கரபாண்டியன் கோரிக்கை விலக்கி பேசினார்.



உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் மாவட்ட பொதுச் செயலாளர் சொக்கலிங்க குமார் துணைத் தலைவர் உதயகுமார் கவி பாண்டியன் வண்ணை சுப்பிரமணியன் கவுன்சிலர் அனுராதா மாவட்டச் செயலாளர் பரணி இசக்கி குறிச்சி கிருஷ்ணன் மண்டல தலைவர்கள் முகமது அனஸ் ராஜா கங்கா ராஜ் டிவிடி ராஜேந்திரன் ரசூல் மைதீன் மாரியப்பன் நிர்வாகிகள் காலை ரசூல் சின்னப்பாண்டி சிவன் பெருமாள் லெனின் பாரதி கே எஸ் மணி உள்பட பலர் கலந்துகொண்டனர் மத்திய அரசின் அமலாக்க துறையை எதிர்த்து கோஷங்களும் எழுப்பப்பட்டன.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்க பிரதமர் நாளை சென்னை வருகிறார்

# மாணவிக்கு பாலியல் தொல்லை பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் கைது





# அமலாக்கத்துறை முன்பாக சோனியாகாந்தி 2வது முறையாக ஆஜரானார்


சென்னை / புதுக்கோட்டை | 27.07.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தேசிக விநாயகம்பிள்ளை , தமிழகக் கவிஞர் (பி.1876) (இ.1954)



சோமசுந்தர பாரதியார் , தமிழகத் தமிழறிஞர் (பி.1879) (இ.1959)



உத்தவ் தாக்கரே , இந்திய அரசியல்வாதியும், சிவ சேனாவின் தலைவர் (பி.1960)



சித்ரா , தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகி (பி.1963)



## இன்றைய நினைவு நாள்

சோமசுந்தரப் புலவர் , ஈழத்துப் புலவர் (பி.1878) (இ.1953)



ச. து. சு. யோகி , தமிழகத் தமிழறிஞர், திரைப்படப் பாடலாசிரியர், இயக்குநர் (பி.1904) (இ.1963)



பட்டம் தாணு பிள்ளை , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், \காந்தியவாதி (பி.1885) (இ.1970)

